2014 ஜூலை 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தகுதித் தேர்வில் தகுதி பெற வழிவகை செய்யும்வகையில், 55 இலட்சம் ரூபாய் செலவில் தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் கல்வியில் தேர்ச்சிப் பெற்று, அதன்மூலம் சமூகப் பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் —*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? யாராவது ஒருவர் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.*

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களது முன்னறிவிப்பு எனது ஆய்வில் இருக்கிறது, நான் அதைப் பார்வையிட்டு, பிறகு சொல்கிறேன். (குறுக்கீடு) எனது ஆய்வில் இருக்கிறது, துறையின் பதிலுக்காக அனுப்பி இருக்கிறேன். பதில் வந்தவுடன் அதை எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அது எனது ஆய்வில் இருக்கிறது, துறையின் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்தது எனது ஆய்வில் இருக்கிறது, துறையின் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வந்தவுடன் பின்னர் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, துறையின் பதில் வந்தவுடன் பின்னர் எடுத்துக் கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) துறையின் பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்கிறேன், உட்காருங்கள். திரு. ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29 ஆம் தேதி. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எடுத்துக்கொள்கிறேன் என்றுதான் சொல்கிறேன். துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இப்படி எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடு) உங்களுக்குத்தான் பேச வாய்ப்பு தந்தேன், இல்லையா? (குறுக்கீடு) இல்லை, முதலில் உங்கள் உறுப்பினர்கள் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள், இது முறையல்ல. (குறுக்கீடு) உங்களுக்கு பேச வாய்ப்புத் தந்தேன் அல்லவா? (குறுக்கீடு) இப்போதும் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) துறையின் பதில் வரட்டும், பதில் வந்தவுடன் நீங்கள் பேச வாய்ப்புத் தருகிறேன். அப்போது நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) துறையின் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.*

(ஆ) வால்பாறை தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளி இறப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 29 ஆம் தேதி, அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் சின்கோனா ரயான் டிவிசனில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய, தேவகி என்ற பெண் உடல்நிலை சரியில்லை என்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றபோது, அங்கிருந்த டாக்டர் அவரைப் பரிசோதனை செய்து, ஊசி போட்ட சிறிது நேரத்திலே அவர் மரணம் எய்திவிட்டார். அதுசம்பந்தமாக அவையில் விவாதிக்க வேண்டுமென்று நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு உங்களிடம் கொடுத்துள்ளேன்.*